Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 219 | உள்ளூர் - 07.08.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 219 | வெளியூர் - 08.08.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


ஆக. 12 சூரிய கிரகணம்... 6 ராசிக்காரர்களுக்கு அலர்ட்!

UPSC-ல் 828 முதல்வர் / து. முதல்வர் பணியிடங்கள்!

தமிழக, கேரள முதல்வர்கள் சந்திப்பு?

இந்திய சினிமாவில் புதிய வரலாறு... 'இராமாயணம்'

## பிறப்புரிமை குடியுரிமையை கட்டுப்படுத்தும் உத்தரவில் கையெழுத்திட்ட அதிபர் டிரம்ப்!

வாஷிங்டன், ஆக. 07–

பிறப்புரிமை குடியுரிமையைக் கட்டுப்படுத்தவும் 'பிறப்புச் சுற்றுலா'வை (birth tourism) தடுக்கவும் குடியேற்றம் தொடர்பான இரண்டு நடவடிக்கைகளில் டிரம்ப் கையெழுத்திட்டார்

அமெரிக்காவில் பிறக்கும் அனைவருக்கும் குடியுரிமை கிடைக்கும் உரிமையை (பிறப்புரிமை குடியுரிமை) கட்டுப்படுத்துவதற்கான தனது முதல் முயற்சியை உச்ச நீதிமன்றம் நிராகரித்த பின்னரும், மீண்டும் ஒருமுறை அதை செயல்படுத்த அதிபர் டொனால்டு டிரம்ப் தயாராகி வருகிறார். இதற்கான நடவடிக்கைகளை அவர் அறிவித்தார்.



குடியேற்றம் தொடர்பான இரண்டு நிர்வாக உத்தரவுகளில் அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டார். அவற்றில் ஒன்று, அமெரிக்காவில் பிறந்த பிறகு அந்நாட்டுக்குக் குடியுரிமை பெறத் தகுதியுடையவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் என்று அவர் கூறினார். இரண்டாவது உத்தரவானது, அமெரிக்காவிற்கு வந்து அங்கு குழந்தையை பெற்றெடுக்கும் நோக்கத்துடன் விசா கோரும் சுற்றுலா பயணிகள் மீதான கட்டுப்பாடுகளை அதிகரிப்பதன் மூலம், டிரம்ப் "பிறப்பு சுற்றுலா" என்று அழைக்கும் நடைமுறையைக் கட்டுப்படுத்த முயல்கிறது.

இதுகுறித்து ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அதிபர் டிரம்ப், "குடியுரிமை தொடர்பான விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் எங்களுக்கு மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு தீர்ப்பு கிடைத்தது. அதனால் நாங்கள் சில மாற்றங்களை செய்து வருகிறோம். நாங்கள் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். இது எங்களை இன்னும் வலுவான முறையில் செயல்பட அனுமதிக்கும். அவர்கள் பிறப்புரிமை குடியுரிமை முறையை ஒரு கேலிக்கூத்தாக மாற்றிவிட்டார்கள்," என்று குறிப்பிட்டார்.

இது குறித்த கூடுதல் விவரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும், தனது இந்த சமீபத்திய நடவடிக்கைகள் அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்று டிரம்ப் கூறினார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தங்கியிருப்பவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் அமெரிக்க குடிமக்கள் அல்ல என்று அறிவிக்க டிரம்ப் மேற்கொண்ட முந்தைய முயற்சிகளை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. அதேவேளையில், பிறப்புரிமை குடியுரிமை குறித்த பரந்த கண்ணோட்டத்தை ஜூன் மாதத்தில் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

## ஒரே ஆண்டில் 23 நாடுகளுக்கு பிரதமர் மோடி பயணம்..!

புதுடெல்லி, ஆக. 07–

பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணச்செலவினம் தொடர்பாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினர்கள் பல்வேறு கேள்வி எழுப்பினர்.

குறிப்பாக கடந்த 2021–ம் ஆண்டு முதல் பிரதமர் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் மற்றும் அவற்றுக்கான ஆண்டு செலவின விவரங்களை சஞ்சய் சிங், சிவதாசன் ஆகிய எம்.பி.க்கள் கேட்டிருந்தனர்.



உறுப்பினர்களின் இந்த கேள்விகளுக்கு வெளியுறவுத்துறை இணை மந்திரி பபித்ரா மார்கரீட்டா எழுத்து மூலம் பதிலளித்தார். அதில் பிரதமரின் வெளிநாட்டு பயணா விவரங்கள் மற்றும் அவற்றுக்கான செலவினங்களை குறிப்பிட்டு இருந்தார்.

அதன்படி, பிரதமர் மோடி கடந்த 2005–ம் ஆண்டு அமெரிக்கா, சீனா, ஜப்பான், பிரான்ஸ் உள்பட 23 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அதற்கு ஆன மொத்த செலவு ரூ.187 கோடி ஆகும்.

இதில் முக்கிய நாடுகளுக்கான தனித்தனி செலவுகளை பொறுத்தவரை பிரான்ஸ் (ரூ.25.59 கோடி), அமெரிக்கா (ரூ.16.54 கோடி), சவுதி அரேபியா (ரூ.15.54 கோடி), பிரேசில் (ரூ.17.72 கோடி), சீனா (ரூ.10.59 கோடி), இங்கிலாந்து (ரூ.9.91 கோடி) ஆகும்.

மேலும் இந்த ஆண்டு இதுவரை பிரதமர் மோடியின் பயணச்செலவு ரூ.74.58 கோடி என மந்திரி அளித்த பதிலில் கூறியுள்ளார். இது கடந்தமாதம் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் மேற்கொண்ட பயணத்துக்கான செலவும் சேர்க்கப்பட்டு உள்ளது என கூறப்பட்டு உள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு ஜூலை மாதம் இதேபோன்று மாநிலங்களவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பிரதமர் மோடியின் (2021–2024) வெளிநாட்டு பயணச் செலவுகளை மத்திய அரசு வெளியிட்டு இருந்தது.

அதன்படி கடந்த 2021–2024 வரையிலான 4 ஆண்டு காலத்துக்கான பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணச்செலவு ரூ.295 கோடி என குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதில் 2021–ம் ஆண்டு செலவு ரூ.36 கோடி, 2022–ம் ஆண்டு செலவு ரூ.55.82 கோடி, 2023–ம் ஆண்டு செலவு ரூ.93 கோடி, 2024–ம் ஆண்டு செலவு ரூ.109 கோடி என ஆண்டு வாரியான செலவு விவரங்களையும் மத்திய அரசு வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. அவற்றையும் மந்திரி சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் வெளிநாட்டு பயணச்செலவு மட்டுமின்றி இந்த பயணங்களின்போது ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பலன் விவரங்கள் குறித்தும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர்.

எனவே அது தொடர்பான பட்டியல்களையும் தனது 35 பக்க எழுத்துப்பூர்வ பதிலில் வெளியுறவுத்துறை இணை மந்திரி பபித்ரா மார்கரீட்டா இணைத்து இருந்தார்.

## 'வெற்றித் தறி' விற்பனை தொடக்கம்!

சென்னை, ஆக. 07–

12–ஆவது தேசிய கைத்தறி நாளையொட்டி, கோ–ஆப்டெக்ஸ் மூலம் தமிழகத்தில் 'வெற்றித் தறி' விற்பனை நிலையங்கள் வெள்ளிக்கிழமை (ஆக.7) முதல் தொடங்கப்படும் என முதல்வர் ச.ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

தேசிய கைத்தறி நாளையொட்டி, முதல்வர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி:






தமிழகத்தின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் கைத்தறித் தொழில், ஆயிரக்கணக்கான நெசவாளர்களின் வாழ்வாதாரமாக உள்ளது. குறிப்பாக, மகளிருக்கு அதிக வேலைவாய்ப்பை வழங்கும் துறையாகவும் இது விளங்குகிறது. நெசவாளர்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தவும், கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிக்க வும் பல்வேறு நலத்திட்ட ங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தொடர்ந்து, தமிழக நெசவாளர்களின் தயாரிப்புகளை சர்வதேச சந்தையில் நேரடியாக விற்பனை செய்யும் நோக்கில் கோ–ஆப்டெக்ஸ் மூலம் 'வெற்றித் தறி' விற்பனை நிலையங்கள் தேசிய கைத்தறி நாளில் தொடங்கப்படுகின்றன.

இந்த நிலையங்களை நாட்டின் முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நெசவாளர்களின் வருமானத்தை உயர்த்துவதுடன், இளம் தலைமுறையினரையும் கைத்தறி ஆடைகளின் பக்கம் ஈர்க்கும்.

கைத்தறி நெசவாளர்களின் உழைப்பை மதித்து, கைத்தறிப் பொருள்களை வாங்கி ஆதரிப்பதன் மூலம் நமது பாரம்பரிய நெசவுக் கலையைப் பாதுகாக்கலாம். தேசிய கைத்தறி நாளில் அனைத்து நெசவாளர்களுக்கும் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாக அதில் தெரிவித்துள்ளார் முதல்வர் ச.ஜோசப் விஜய் .

## டெல்லி திட்டத்துக்கு

# தமிழகம் பதிலடி தருமா? முதல்வர் விஜய் தலைமையில்

## எம்.பி.க்கள் முக்கிய ஆலோசனை!

சென்னை, ஆக. 07–

தொகுதி மறுவரையறை தொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் மற்றும் அதனால் தமிழகத்துக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து ஆலோசிக்க, முதல்வர் விஜய் தலைமையில் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தமிழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் (ஆகஸ்ட் 8) பிற்பகல் 3 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.




நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், தமிழகத்தின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டை உருவாக்கும் நோக்கில் இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, தொகுதி மறுவரையறையால் மாநிலத்தின் பிரதிநிதித்துவம், மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மற்றும் அரசியல் தாக்கங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் வகையில் அனைத்து மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லம் மூலம் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் மற்றும் எடுக்கப்படும் முடிவுகள், தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தமிழகத்தின் அடுத்தகட்ட அரசியல் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு முக்கிய வழிகாட்டுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரதமர் மோடியுடன் நெதன்யாகு தொலைபேசியில் ஆலோசனை!

புதுடெல்லி, ஆக. 07–

பிரதமர் நரேந்திர மோடியை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு முக்கிய ஆலோசனை மேற்கொண்டார்.




இந்த உரையாடலின் போது, இந்தியா – இஸ்ரேல் இடையிலான முக்கிய கூட்டாண்மையை ஆய்வு செய்த இரு தலைவர்களும், பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்த உறுதியேற்றனர்.

மேற்கு ஆசிய போர் சூழல் குறித்துப் பேசிய இரு தலைவர்களும், தொடர்ந்து தொடர்பில் இருப்பது என முடிவு செய்தனர். கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது நடத்திய தாக்குதல்களுடன் தொடங்கிய இந்தப் போர், ஐந்து மாதங்களுக்கும் மேலாகத் தீர்வின்றி நீடித்து வருகிறது.

## தமிழக, கேரள முதல்வர்கள் சந்திப்பு?

சென்னை, ஆக. 07–

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் குறித்து தமிழக முதல்வர் விஜயுடன் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாகக் கேரள முதல்வர் வி.டி. சதீஷன் தெரிவித்துள்ளார். தமிழகம் மற்றும் கேரள எல்லையில் உள்ள இடுக்கி மாவட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை அமைந்துள்ளது. 1885 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த அணையின் பராமரிப்பு உரிமைகள் தமிழக அரசிடமே உள்ளது.




இந்நிலையில், இந்த அணையின் நீர் மட்டத்தை உயர்த்த கேரள அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. நூற்றாண்டுகாலம் பழமை வாய்ந்த இந்த அணையின் மீது பாதுகாப்பு குறித்து கவலை தெரிவித்து வரும் கேரள அரசு, அதன் அருகிலேயே புதிய அணையைக் கட்டவும் அறிவுறுத்தி வருகிறது. இதனிடையே, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் எனத் தமிழகத்தில் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. இதனால், இரு மாநிலங்களுக்கும் இடையில் சிக்கல் நீடித்து வருகிறது. இந்நிலையில், இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கேரள முதல்வர் வி.டி.சதீசன், " முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தற்போது பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. இது சம்பந்தமாக விரைவில், தமிழக மற்றும் கேரள முதல்வர்கள் சந்திப்பு நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

இதனிடையே, கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மோன்ஸ் ஜோசப் கூறுகையில், " முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் மட்டத்தை உயர்த்த கேரள அரசு ஒரு போதும் அனுமதிக்காது" என்று தெரிவித்துள்ளார்.

## தலையங்கம்

மதுரை மணி
வெள்ளிக்கிழமை 07.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 22-ம் தேதி

# போரில் மனிதனா... AI–யா? உயிர் பறிக்கும் முடிவை யார் எடுக்கப் போகிறார்கள்?



உலக நாடுகளின் போர்க்களங்களில் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு வேகமாக அதிகரித்து வருகிறது. எதிரியின் நகர்வுகளை கண்காணிப்பது, தாக்குதல் இலக்குகளை கண்டறிவது, எந்த ஆயுதத்தை பயன்படுத்துவது என்பதுவரை AI முக்கிய பங்கு வகிக்கிறது. ஒருகாலத்தில் பல மணி நேரம் எடுத்த ராணுவ முடிவுகள், இன்று சில நொடிகளில் எடுக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

அமெரிக்காவின் Project Maven உள்ளிட்ட திட்டங்கள் மூலம் ட்ரோன்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் கண்காணிப்பு கருவிகளில் இருந்து கிடைக்கும் கோடிக்கணக்கான தகவல்களை AI ஆய்வு செய்து ராணுவத்திற்கு பரிந்துரைகளை வழங்குகிறது. தற்போது பல நாடுகள் AI–யின் உதவியை பயன்படுத்தினாலும், தாக்குதல் நடத்தும் இறுதி உத்தரவை மனிதர்களே வழங்குவதாக கூறுகின்றன.

ஆனால் AI பரிந்துரைகள் மேலும் துல்லியமாகவும் வேகமாகவும் மாறிவரும் நிலையில், "யார் வாழ வேண்டும்... யார் சாக வேண்டும்..." என்ற முடிவெடுக்கும் அதிகாரம் எதிர்காலத்தில் AI கைகளுக்குச் சென்றுவிடுமா? என்ற கேள்வி உலக நாடுகளிடையே தீவிர விவாதமாகியுள்ளது. மனித தலையீடு இல்லாமல் இலக்கை தேர்வு செய்து தாக்கும் முழு தன்னாட்சி ஆயுதங்கள் (Fully Autonomous Weapons) குறித்த அச்சமும் அதிகரித்து வருகிறது. உலகின் எதிர்கால போர்க்களத்தில் மனித முடிவுகளா, AI முடிவுகளா மேலோங்கும் என்பதே தற்போது மிகப்பெரிய கவலையாக மாறியுள்ளது.

# பங்குச்சந்தை முதலீட்டு ஆலோசகர் பி.ஆர்.சுந்தர் ஜாமீனில் விடுவிப்பு!



சென்னை, ஆக. 07–

பங்குச்சந்தை முதலீட்டு ஆலோசகர் பி.ஆர்.சுந்தர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். அரசியல் பழிவாங்கும் நோக்கில் பி.ஆர்.சுந்தர் கைது செய்யப்பட்டதாக பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்திருந்தனர். பி.ஆர்.சுந்தரை நீதிமன்ற காவலுக்கு அனுப்ப நீதிமன்றம் மறுத்த நிலையில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

# மெல்ல மறையும் பசிபிக் பெருங்கடல்... உருவாகிறதா புதிய சூப்பர் கண்டம்?



டெல்லி, ஆக. 07–

உலகின் மிகப்பெரிய பெருங்கடலான பசிபிக் பெருங்கடல் மெல்ல மெல்ல சுருங்கி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதற்கு காலநிலை மாற்றம் காரணமல்ல; பூமியின் டெக்டானிக் தட்டுகளின் இயற்கை நகர்வுகளே காரணம் என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

சுமார் 15.5 கோடி சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட பசிபிக் பெருங்கடல், பூமியின் மேற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துள்ளது. உலகின் கடல் நீரில் பாதிக்கும் அதிகமான நீர் இங்குதான் உள்ளது. ஆனால், Ring of Fireபகுதியில் உள்ள பல Subduction Zone–களில் கடல்தளம் தொடர்ந்து பூமிக்குள் இழுக்கப்படுவதால், புதிய கடல்தளம் உருவாகும் வேகத்தை விட அழியும் வேகம் அதிகரித்து, பசிபிக் பெருங்கடல் சுருங்கி வருகிறது.

இந்த செயல்முறை தொடர்ந்தால், 20 முதல் 30 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு உலகின் கண்டங்கள் ஒன்றிணைந்து "ஆமேசியா (Amasia)" என்ற புதிய சூப்பர் கண்டம் உருவாகும் வாய்ப்பு இருப்பதாக ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். மேலும், உலகின் மிக ஆழமான கடற்பகுதியான மரியானா டிரெஞ்ச் கூட இந்த கடல்தளம் பூமிக்குள் மூழ்கும் முக்கிய பகுதிகளில் ஒன்றாக இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இனி இலவசம் கிடையாது.. UPI பரிவர்த்தனைகளுக்கு சேவைக் கட்டணம் - மக்களவையில் மசோதா நிறைவேற்றம்!



புதுடெல்லி, ஆக. 07–

ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் UPI பணப்பரிவர்த்தனைகளுக்கு MDR எனும் சேவைக்கட்டணத்தை விதிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் 'வரி விதிப்பு மற்றும் பிற சட்டங்கள் (திருத்த) மசோதா' மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 'Payment and Settlement Systems Act' சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று தாக்கல் செய்த இம்மசோதா விவாதமின்றி குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை அமைப்புகளைப் பராமரிப்பதற்காக, வங்கிகள் அல்லது கட்டண சேவை நிறுவனங்கள் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கும் கட்டணமே Merchant Discount Rate (MDR) ஆகும்.

2020 ஜனவரி முதல் யு.பி.ஐ மற்றும் RuPay கார்டு பரிவர்த்தனைகளுக்கு MDR கட்டணம் முழுமையாக விலக்களிக்கப்பட்டிருந்தது.

இலவச சேவை முறையை நிதி ரீதியாகத் தொடர்ந்து நடத்துவது கடினம் என இந்திய ரிசர்வ் வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம், தேவையான கட்டங்களில் வங்கிகள் மற்றும் சேவை நிறுவனங்கள் MDR கட்டணத்தைச் சேகரிக்க அனுமதி அளிக்கும் சட்டப்பூர்வ அதிகாரம் இனி மத்திய அரசிடம் இருக்கும்.

அதிகத் தொகை கொண்ட யு.பி.ஐ பரிவர்த்தனைகளுக்கோ அல்லது வணிகர்களின் வருடாந்திர வருவாயை அடிப்படையாகக் கொண்டோ எதிர்காலத்தில் சேவைக்கட்டணம் விதிக்கப்படலாம்.

தற்போது வணிகர்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றாலும், MDR அறிமுகப்படுத்தப்பட்டால் இந்த நிதிச்சுமை சிறுகச் சிறுகக் கடைசியில் வாடிக்கையாளர்களைச் சென்றடைய வாய்ப்புள்ளது. தற்போது கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகளுக்கு சராசரியாக 1.5% மற்றும் டெபிட் கார்டுகளுக்கு 0.9% MDR கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மேலும், RTGS மற்றும் NEFT போன்ற பிற டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு ஏற்கனவே சேவைக்கட்டணம் அமலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 80-வது சுதந்திர தினம்: சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு!



சென்னை, ஆக. 07–

நாட்டின் 80–வது சுதந்திர தின விழா வருகிற 15–ந்தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இன்று முதல் வருகிற 20–ந் தேதி நள்ளிரவு வரை 5 அடுக்கு பாதுகாப்பு அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமலில் இருந்த 3 அடுக்கு பாதுகாப்பு, தற்போது 5 அடுக்காக பலப்படுத்தி, விமான நிலையம் முழு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டு உள்ளது. இதையொட்டி பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகள் தீவிர சோதனை செய்யப்பட்டு வருகிறது. பயணிகள் கையில் எடுத்துச் செல்லும் உடைமைகளில் திரவப்பொருட்கள், ஜாம், அல்வா, ஊறுகாய், எண்ணெய் பாட்டில்கள் உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்திய தொழில் பாதுகாப்புப் படை வீரர்கள், வெடிகுண்டு நிபுணர்கள், மோப்ப நாய்கள் உதவியுடன் விமான நிலைய நுழைவாயில், விமானங்கள் நிறுத்தும் பகுதிகள் என விமான நிலைய வளாகம் முழுவதும் தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புப் படையினரும் தொடர்ந்து ரோந்து வருகின்றனர்.

பாதுகாப்பு பணியில் ஈடுபடுபவர்கள் 20–ந் தேதி வரையில் விடுமுறை எடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் வெளி பகுதியில் சென்னை மாநகர போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு உள்ளனர். விமான நிலையம் வரும் வாகனங்கள் மற்றும் பயணிகள் பலத்த சோதனைக்கு பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். பார்வையாளர்களுக்கு கடந்த சில ஆண்டுகளாக தடை அமுலில் உள்ளது. முக்கிய பிரமுகர்களை வரவேற்க, வழி அனுப்ப வருபவர்களுக்கு சிறப்பு பாஸ்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கூடுதல் பாதுகாப்பு சோதனைகள் காரணமாக உள்நாட்டு பயணிகள் விமானம் புறப்படும் நேரத்துக்கு 1½ மணி நேரத்துக்கு முன்னதாகவும், பன்னாட்டு பயணிகள் 35 மணி நேரத்துக்கும் முன்பாகவும் விமான நிலையத்துக்கு வருமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் விமான நிலைய வளாகம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் டிரோன்கள் பறக்க விடுதல், அதிக சக்தி கொண்ட லேசர் விளக்குகளை பயன்படுத்துதல், கியாஸ் நிரப்பிய பலூன்களை பறக்க விடுதல் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து அமலில் இருக்கும் என்றும், இதனால் பயணிகள் அச்சப்பட வேண்டாம்.பாதுகாப்பு சோதனைகளுக்கு பயணிகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# 108 ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு 25 சதவீத ஊதிய உயர்வு ...!



சென்னை, ஆக. 07–

தமிழக 108 ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு 202223ஆம் ஆண்டிற்கான 25 சதவீத ஆண்டு ஊதிய உயர்வையும், 8.33 சதவீத குறைந்தபட்ச போனசையும் வழங்க வேண்டும் என்று சென்னை தொழில் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு

தமிழ்நாடு 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் மற்றும் தமிழ்நாடு 108 அவசரகால ஆம்புலன்ஸ் ஊழியர்கள் நலச்சங்கம் சார்பில், 202122 மற்றும் 202223ஆம் ஆண்டுகளுக்கு 30 சதவீத ஆண்டு ஊதிய உயர்வும், 202223ஆம் ஆண்டிற்கான தீபாவளி போனசும் வழங்கக் கோரி, 2024ஆம் ஆண்டு பிப்ரவரியில் சென்னை தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயத் தலைவர் பி. முருகன், இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்ட பின்னர் தீர்ப்பு வழங்கினார். தீர்ப்பில், 202122ஆம் ஆண்டுக்கான 16 சதவீத ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை அடிப்படையில் வழங்கப்பட்டதால், அந்த ஆண்டிற்கு 30 சதவீத ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியாது என்று தெரிவித்தார்.

அதேசமயம், 202223ஆம் ஆண்டில் புதிய பேச்சுவார்த்தை நடத்தாமல் அதே 16 சதவீத ஊதிய உயர்வைத் தொடர்ந்ததும், அகவிலைப்படி உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படாததும் கருத்தில் கொண்டு, அந்த ஆண்டிற்கு 25 சதவீத ஆண்டு ஊதிய உயர்வை இ.எம்.ஆர்.ஐ. கிரீன் ஹெல்த் சர்வீஸ் நிறுவனம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். ஏற்கனவே வழங்கப்பட்ட 16 சதவீத உயர்வை இதில் கழித்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

மேலும், ஊக்கத்தொகை மற்றும் பண்டிகைச் செலவுத்தொகையை போனசாகக் கருத முடியாது என்பதால், 202223ஆம் ஆண்டிற்கு தகுதியுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் 8.33 சதவீத குறைந்தபட்ச போனஸ் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

அத்துடன், வழக்குச் செலவாக இரு தொழிற்சங்கங்களுக்கும் தலா ரூ.25 ஆயிரம் வீதம், இரண்டு மாதங்களுக்குள் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

# நாரைக்கிணறு பட்டா பிரச்சனை: அமைச்சர், கலெக்டர் நேரில் ஆய்வு...!



நாமக்கல், ஆக. 07–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தாலுகா நாரைக்கிணறு கிராம மக்களுக்கு பட்டா வழங்குவது தொடர்பாக, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இளம் விவசாய சங்கத் தலைவர் சவுந்திரராஜன், பல ஆண்டுகளாக நாரைக்கிணறு கிராம மக்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருப்பதாகவும், இதற்காக மனு, ஆர்ப்பாட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலக முற்றுகை உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டும் தீர்வு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். இந்த நிலையில், பட்ஜெட் கூட்டத்தொடரின்போது தலைமைச் செயலகத்தை முற்றுகையிட திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், பத்திரப்பதிவு துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன் மற்றும் கலெக்டர் நேரில் நாரைக்கிணறு கிராமத்திற்கு சென்று ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர். இதையடுத்து தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், உறுதியளித்தபடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மீண்டும் போராட்டம் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் சவுந்திரராஜன் தெரிவித்தார்.



# ஆக. 12 சூரிய கிரகணம்... 6 ராசிக்காரர்களுக்கு அலர்ட்!



2026–ம் ஆண்டின் கடைசி சூரிய கிரகணம் ஆகஸ்ட் 12–ம் தேதி இரவு 9.04 மணி முதல் ஆகஸ்ட் 13–ம் தேதி அதிகாலை 1.27 மணி வரை நிகழவுள்ளது. இந்த கிரகணம் கடக ராசியின் ஆயில்யம் நட்சத்திரத்தில் நடைபெறுகிறது. இந்தியாவில் இந்த கிரகணம் தெரியாததால் சூதக காலம் பொருந்தாது. இருப்பினும், ஜோதிடக் கணிப்பின்படி சில ராசிக்காரர்கள் தொழில், நிதி, உடல்நலம் மற்றும் குடும்ப விஷயங்களில் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய காலமாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக மேஷம், மிதுனம், கடகம், சிம்மம், தனுசு மற்றும் மகரம் ஆகிய 6 ராசிக்காரர்கள் முக்கிய முடிவுகளை எடுப்பதில் அவசரம் காட்ட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய முதலீடுகள், அதிக தொகை பணப் பரிவர்த்தனைகள் மற்றும் தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. பணியிடத்தில் கருத்து வேறுபாடுகள், பணிச்சுமை, தாமதங்கள் போன்ற சவால்கள் உருவாகலாம் என்பதால் பொறுமையுடன் செயல்படுவது அவசியம்.

உடல்நலத்திலும் கவனம் செலுத்த வேண்டும். போதிய ஓய்வு, சீரான உணவு மற்றும் மன அமைதியை பேணுவது முக்கியம். குடும்பத்தினருடன் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்து, நிதானமாக நடந்து கொள்வது நல்ல பலனை தரும் என ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் சூதக காலம் இல்லாவிட்டாலும், விருப்பமுள்ளவர்கள் கிரகணம் முடிந்த பிறகு வீடு சுத்தம் செய்து குளித்து அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று வழிபடலாம் என்றும் கூறப்படுகிறது.

**மேஷம்** குடும்பத்தில் கருத்து வேறுபாடு, பணப்பரிவர்த்தனைகளில் கவனம், புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** உடல்நலம், உணவு பழக்கம் மற்றும் நிதி முடிவுகளில் எச்சரிக்கை தேவை. முதலீடுகளுக்கு அனுபவசாலிகளின் ஆலோசனை பெறுவது நல்லது.

**கடகம்** பணியிட அழுத்தம், தொழிலில் தடை, உடல்நலத்தில் கவனம் அவசியம். அவசர முடிவுகளைத் தவிர்க்க வேண்டும்.

**சிம்மம்** செலவுகள் அதிகரிக்கலாம். தொழில் மற்றும் குடும்ப நிதி திட்டமிடலில் கவனமாக இருக்க வேண்டும்.

**தனுசு** பணியிடத்தில் எச்சரிக்கை, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். சொத்து வாங்கும் முயற்சிகளில் தாமதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

**மகரம்** பணிச்சுமை அதிகரிக்கலாம். பயணங்களில் சிரமம், மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

**குறிப்பு:** இந்த தகவல்கள் அனைத்தும் ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டவை. இதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை. வாசகர்கள் தங்களின் தனிப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே இதை அணுகுவது நல்லது.

# அக்னி - 4 ஏவுகணை சோதனை வெற்றி!



அக்னி–4 பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையை இந்தியா வியாழக்கிழமை வெற்றிகரமாக மேற்கொண்டது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஒடிசாவின் சந்திப்பூர் மாவட்டத்தில் உள்ள ஏவுதளத்தில் அக்னி–4 நடுத்தர பாலிஸ்டிக் ஏவுகணை (எம்ஆர்பிஎம்) சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அனைத்து செயல்பாட்டு மற்றும் தொழில்நுட்பச் சோதனைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டன. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்தது' எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் உத்திசார் ஏவுகணை தயாரிப்புத் திட்டத்தின்கீழ், அக்னி ரக ஏவுகணைகளின் வரிசையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உருவாக்கப்பட்ட அக்னி 4 ஏவுகணை, 4,000 கி.மீ. வரை பாய்ந்து தரையில் இருந்து தரையில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டதாகும். அணுகுண்டுகள் உள்பட 1,000 கிலோ வரையிலான வெடிகுண்டுகளை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை கொண்டது. சாலைகள் மட்டுமல்லாது, கடினமான நிலப்பரப்புகளில் இருந்தபடியும் இந்த ஏவுகணையை செலுத்த முடியும் என்பதால் இவை உத்தி ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ராணுவத்தில் ஏற்கெனவே இணைக்கப்பட்ட அக்னி 4 ஏவுகணைகள் செயல்திறன், தயார்நிலை ஆய்வுக்காக அவ்வபோது பரிசோதிக்கப்படுகின்றன.

முன்னதாக, அக்னி பிரைம் மற்றும் அக்னி–3 ஏவுகணைகளின் சோதனையையும் இந்தியா வெற்றிகரமாக மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்



# மருந்து சாப்பிட்ட பிறகு டீ, காபி குடிக்கிறீங்களா?




உடல்நலக் கோளாறு ஏற்பட்டால் மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகளை சரியான நேரத்தில் எடுத்துக்கொள்வது எவ்வளவு முக்கியமோ, அவற்றை எதனுடன் எடுத்துக்கொள்கிறோம் என்பதும் அதே அளவு முக்கியமானது. மருந்துகளை தண்ணீருக்கு பதிலாக டீ, காபி, குளிர்பானம் அல்லது பழச்சாறுடன் உட்கொள்ளும் பழக்கம் சிலரிடம் காணப்படுகிறது. இது சில மருந்துகளின் செயல்திறனை பாதிக்கக்கூடும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக, காபி மற்றும் டீயில் உள்ள கஃபீன் சில மருந்துகளுடன் சேரும்போது உடலில் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அதேபோல், சில பழச்சாறுகள் குறிப்பிட்ட மருந்துகள் உடலில் உறிஞ்சப்படும் விதத்தை மாற்றக்கூடும்.

இதனால் மருந்தின் பலன் குறைவதோ அல்லது பக்கவிளைவுகள் அதிகரிப்பதோ ஏற்படலாம். மருத்துவர் அல்லது மருந்தாளுநர் வேறு விதமாக அறிவுறுத்தாத வரை, பெரும்பாலான மருந்துகளை சாதாரண குடிநீருடன் எடுத்துக்கொள்வதே பாதுகாப்பான வழியாக கருதப்படுகிறது. குறிப்பாக, மருந்தை உட்கொண்ட உடனேயே மதுபானம் அருந்துவதையும் தவிர்க்க வேண்டும். இது சில மருந்துகளுடன் தீவிரமான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். மேலும், பால், மூலிகை பானங்கள் அல்லது சத்துப் பானங்களுடன் மருந்துகளை எடுத்துக்கொள்ளும் முன்பும் மருத்துவ ஆலோசனையைப் பெறுவது நல்லது.

ஏனெனில், சில மருந்துகள் இவற்றுடனும் வினைபுரிந்து அவற்றின் செயல்பாட்டை மாற்றக்கூடும். மருந்துகளை சரியான நேரத்தில், சரியான அளவில் மற்றும் சரியான முறையில் உட்கொள்வதே விரைவில் குணமடைய உதவும். எனவே, தண்ணீரைத் தவிர வேறு எந்தப் பானத்துடனும் மருந்து சாப்பிடும் பழக்கம் இருந்தால், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.

# அமெரிக்காவில் குடியேற்ற விண்ணப்பங்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்!



வாஷிங்டன், ஆக. 07–

அமெரிக்காவில் குடியேற்ற விண்ணப்பங்களை தாக்கல் செய்பவர்கள், தேவையான ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்காவிட்டால், அவர்களின் விண்ணப்பங்களை நிராகரிக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டுப்பாடு உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

இதற்கு முன்பு, விண்ணப்பங்களில் குறைபாடுகள் இருந்தால் அதை சரிசெய்ய 12 வாரங்கள் அவகாசம் வழங்கப்பட்டது. இனி, தகுதிக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்கத் தவறினால், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி விண்ணப்பங்களை நிராகரிக்க அதிகாரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சில விண்ணப்பதாரர்கள் முழுமையற்ற விண்ணப்பங்களை தாக்கல் செய்து, வேலைவாய்ப்பு உள்ளிட்ட கூடுதல் சலுகைகளை முறையற்ற வகையில் பெறுவதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள மற்றும் புதிய விண்ணப்பங்கள் அனைத்திற்கும் இந்த விதி பொருந்தும் என்று அமெரிக்க குடியுரிமை மற்றும் குடிவரவு சேவைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# போர்நிறுத்தம்! காஸாவில் 300 குழந்தைகள் கொலை?

காஸா, ஆக. 07–

இஸ்ரேல் உடனான போர்நிறுத்தம் அமலில் இருக்கும் 300 நாள்களில் 300 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாக யுனிசெஃப் அமைப்பு அறிவித்துள்ளது. காஸாவில், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனக் கிளர்ச்சிப்படையான ஹமாஸ் இடையே 2025 அக்டோபரில் கையெழுத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்த போர் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.



இருப்பினும், காஸாவில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மற்றும் அகதிகள் முகாம்களைக் குறிவைத்து இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. போர்நிறுத்தம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு நடத்தப்பட்ட தாக்குதல்களில் மட்டும் காஸாவில் 1,000–க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், போர்நிறுத்தம் கொண்டு வரப்பட்டதில் இருந்து காஸாவில் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு குழந்தையாவது கொல்லப்பட்டு வருவதாக, மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளுக்கான யூனிசெஃப் இயக்குநர் எட்வர்ட் பெய்க்பெடர் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது: “2025 அக்டோபரில் போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டதற்குப் பிந்தைய 300 நாள்களில், காஸாவில் குறைந்தது 300 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். அதன்படி, நாளொன்றுக்கு ஒரு குழந்தை கொல்லப்படுகிறது” எனக் கூறியுள்ளார். முன்னதாக, காஸா மீதான இஸ்ரேலின் போரில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட சுமார் 73,000–க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பரந்தூர் விமான நிலையத் திட்டம்: மக்களவையில் மத்திய அரசு முக்கியத் தகவல்!




சென்னை, ஆக. 07–

பரந்தூர் விமான நிலைய திட்டம் தொடர்பாக தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன், நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி எழுப்பினார். “பரந்தூர் விமான நிலைய திட்டம் தொடருகிறதா அல்லது கைவிடப்படுகிறதா? இது தொடர்பாக தமிழக அரசிடம் இருந்து மத்திய அரசுக்கு ஏதேனும் கடிதம் அல்லது தகவல் வந்துள்ளதா?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.இதற்கு விமானப் போக்குவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மோஹோல் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அதில், “பரந்தூர் விமான நிலைய திட்டத்துக்கு மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், இந்த திட்டத்தை கைவிடுவது தொடர்பாக 2026–ம் ஆண்டு மே மாதத்துக்கு பிறகு தமிழக அரசிடம் இருந்து எந்த தகவலும் வரவில்லை.

விமான நிலைய திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான அனைத்து பொறுப்புகளும் சம்பந்தப்பட்ட விமான நிலைய மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மாநில அரசைச் சார்ந்தவை. நிலம் கையகப்படுத்துதல், தேவையான அனுமதிகளைப் பெறுதல், நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே திட்டம் செயல்படுத்தப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

# முதல்-அமைச்சர் விஜய்-சங்கீதா விவாகரத்து வழக்கு இன்று விசாரணை!



சென்னை, ஆக. 07–

த.வெ.க. தலைவரும், தமிழக முதல்– அமைச்சருமான விஜய்க்கும், அவரது மனைவி சங்கீதாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்பட்ட நிலையில், சங்கீதா, விவாகரத்து கோரி செங்கல்பட்டு குடும்ப நல கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

சங்கீதா தாக்கல் செய்த மனுவில், கணவர் விஜய்யுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக விவாகரத்து வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார். மேலும், ஜீவனாம்சம் மற்றும் நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் வசிப்பதற்கான உரிமையும் வழங்க வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, விஜய் மற்றும் சங்கீதா இருவரும் நேரில் ஆஜராகவில்லை. அவர்களது வழக்கறிஞர்கள் மட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். இருவரும் பொதுவெளியில் பிரபலமானவர்கள் என்பதால், பாதுகாப்பு மற்றும் நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு, வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆஜராக அனுமதி வழங்க வேண்டும் என்று தரப்புகள் கோரிக்கை வைத்தன.

அதனை தொடர்ந்து இந்த வழக்கு கடந்த ஜூன் மாதம் 15–ந்தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, சங்கீதா தரப்பு வக்கீலிடம் நீங்கள் ஏன் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை? என்று கேள்வி எழுப்பினார். பின்னர் இருவரையும் சமரச மையத்துக்குதான் அனுப்ப வேண்டும் என்று கூறி வழக்கை ஆகஸ்ட் 7–ந்தேதிக்கு தள்ளி வைத்தார். இந்த நிலையில் இந்த வழக்கு (வெள்ளிக்கிழமை) விசாரணைக்கு வர இருக்கிறது.

# புதிய உச்சத்தை நோக்கி சர்க்கரை விலை..?



புதுடெல்லி, ஆக. 07–

இருப்பு குறைவாக உள்ள நிலையில், பண்டிகை கால தேவை அதிகரித்து வருவதால், நாட்டில் மொத்த சர்க்கரை விலை வரலாறு காணாத உச்சத்தை எட்டி யுள்ளது. அடுத்த மூன்று மாதங்களும் விலை உயர்ந்த நிலையிலேயே நீடிக்கும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

“கோலாப்பூரில், கிலோ சர்க்கரையின் மொத்த விலை கடந்த ஒரு மகாராஷ்டிராவின் 100 மாதத்தில் 10.20 சதவீதம் உயர்ந்து 4,716 ரூபாயாக புதிய உச்சத்தை எட்டியுள்ளது. குறிப்பாக, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி உள்ளிட்ட எதிர்வரும் பண்டிகை காலத்தில் இனிப்புகளின் பயன்பாடு அதிகரிப்பது வழக்கம். இதனால், சர்க்கரை ஆலைகள் கையிருப்பை படிப்படியாக சந்தைக்கு அனுப்பும் போது, மேலும் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு வர்த்தகர் கள் தெரிவித்துள்ளனர்.

# த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட்: மாற்றமா?, தடுமாற்றமா?




சென்னை, ஆக. 07–

த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

**த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட்**

‘ஆட்சி’ மாறினால் ‘காட்சி’ மாறும் என்ற எதிர்பார்ப்பு எப்போதுமே வாக்களித்த மக்களிடம் உண்டு. அதுபோன்ற எதிர்பார்ப்பில்தான் தற்போது த.வெ.க. கையில் ஆட்சியை வழங்கியிருக்கிறார்கள்.

த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்று 88 நாட்கள் ஆகும் நிலையில், தங்களுடைய அரசின் முதல் பட்ஜெட்டை சட்டசபையில் தாக்கல் செய்திருக்கிறது. நேற்று முன்தினம் (5–ந் தேதி) பொது பட்ஜெட்டும், நேற்று (6–ந் தேதி) வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**தேர்தல் வாக்குறுதி இடம்பெற்றதா?**

த.வெ.க. அரசு ஆட்சிக்கு வந்தவுடன் ஊழல் ஒழிப்புக்கு முன்னுரிமை கொடுத்தது. ‘ஆட்சி’ மாறியவுடன் ‘காட்சி’ மாறுவதுபோன்ற மனநிலையை மக்களுக்கு இது ஏற்படுத்தினாலும், எதிர்கால திட்டமிடலுடன் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் இது எதிரொலித்ததா? என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

பொதுவாக, ஒவ்வொரு பட்ஜெட்டின் போதும் மக்கள் எதிர்பார்ப்பது, ஆளுங்கட்சி தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறதா? என்பதாகத்தான் இருக்கும். இந்த முறையும் தேர்தலின்போது த.வெ.க. அளித்த வாக்குறுதிகள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருக்கிறதா? என்ற தேடல் மக்களிடம் இருக்கிறது.

**பெண்களுக்கு ஏமாற்றம்**

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற முக்கிய அறிவிப்புகளில், மணப்பெண்ணுக்கு 1 பவுன் தங்கம், பட்டுச்சேலை வழங்குவது, தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியது போன்றவை பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளது.

அதே நேரத்தில், மகளிருக்கான உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்த்தப்படும், ஆண்டுக்கு 6 கியாஸ் சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும் என்பது போன்ற அறிவிப்புகள் இடம்பெறவில்லை. இந்த 2 அறிவிப்புகளையும் மிகவும் எதிர்பார்த்த பெண்களுக்கு சற்று ஏமாற்றம்தான்.

**ஒரு குடும்பத்தின் தலையில் ரூ.4.80 லட்சம் கடன் சுமை**

இதுதவிர, துறை வாரியாக செயல்பாட்டில் இருக்கும் திட்டங்களுக்கும், செயல்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் அறிவிப்புகளை பொறுத்தவரை முந்தைய ஆட்சியாளர்களிடம் இருந்து சற்று மாற்றம் ஏற்பட்டதுபோல் தெரிந்தாலும், நிதி மேலாண்மையை பொறுத்தவரை தடுமாற்றத்தை காட்டுவதாகவே தெரிகிறது.

தமிழக அரசின் தற்போதைய கடன் அளவு ரூ.10.98 லட்சம் கோடி என்ற அளவில் உள்ளது. இதை வைத்து பார்க்கும்போது, ரேஷன் கார்டு வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் தலையிலும் ரூ.4 லட்சத்து 80 ஆயிரம் என்ற அளவில் கடன் சுமை உள்ளது.

**கடனுக்கான வட்டி அதிகரிப்பு**

இதுமட்டுமல்லாமல், இந்த நிதி ஆண்டில் (2026–27) ரூ.1 லட்சத்து 73 ஆயிரத்து 445 கோடி கடன் பெற திட்டமிடப்பட்டிருப்பதாகவும் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே, வாங்கிய கடனுக்கு ஆண்டுதோறும் அதிக அளவில் வட்டி கட்டப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் மட்டும் ரூ.78,683 கோடி வட்டி கட்டப்பட உள்ளது.

இந்த வட்டித்தொகை அடுத்த நிதியாண்டில் (2027–28) ரூ.89,698 கோடியாகவும், 2028–29–ம் நிதியாண்டில் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 256 கோடியாகவும் உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, கடன் வாங்கும் அளவு குறையப்போவதில்லை என்பதையே இது காட்டுகிறது.

**3 மாதங்களில் ரூ.21 ஆயிரம் கோடி கடன்**

தமிழக பட்ஜெட்டே ரூ.4 லட்சம் கோடிக்குத்தான் போடப்படுகிறது. வரவு அதைவிட குறைவாக இருப்பதால், பற்றாக்குறை அதிகரிக்கிறது. அதை சமாளிக்க கடன் வாங்கப்படுகிறது. த.வெ.க. அரசின் கடந்த 3 மாதகால ஆட்சியில் மட்டும் ரூ.21 ஆயிரம் கோடி கடன் வாங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் நிதிநிலை குறித்து நிதி அமைச்சர் மரிய வில்சன் கூறும்போது, “தமிழக அரசின் நிதிநிலையை சீரமைக்க 2 ஆண்டுகள் தேவைப்படும்” என்று கூறியுள்ளார்.

அதேநேரத்தில், நிதித்துறை செயலாளர் சித்திக், “தமிழக அரசின் கடன் 50 ஆண்டுகள் கடந்தாலும் இருந்து கொண்டேதான் இருக்கும். அதை குறைக்க முடியாது” என்று அதிரடியாக கூறியிருக்கிறார்.

**கடன் அளவு குறையாதா?**

அப்படி என்றால், இனி தமிழ்நாட்டின் கடன் அளவு குறையவே குறையாதா?, ஒவ்வொருவரும் கடன் சுமையுடன் தான் அழைய வேண்டுமா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடன் வாங்கும் அளவை குறைக்க வேண்டும் என்றால், செலவை குறைக்க வேண்டும். ஆனால், கடந்த கால தி.மு.க., அ.தி.மு.க. அரசுகளைப் போல், த.வெ.க. அரசும் வாக்குறுதிகளை அள்ளி வீசியிருப்பதால், அதை நிறைவேற்றும்போது செலவு அதிகரிக்கத்தான் செய்யும்.

**வருவாயை பெருக்க முடியாதா?**

வரியை உயர்த்த வேண்டும் என்றாலும், பெரும்பாலான வரிகள் ஜி.எஸ்.டி. வரம்புக்குள் வருவதால், மத்திய அரசால் மட்டுமே வரி உயர்வை கொண்டுவர முடியும். சொத்து வரி, மின் கட்டணம், பஸ் டிக்கெட் கட்டணம், குடிநீர் கட்டணம் போன்றவற்றை மாநில அரசே உயர்த்த முடியும் என்றாலும், மக்கள் மத்தியில் எதிர் வினைகளை உருவாக்கும் என்பதால், அதற்கு ஆட்சியாளர்கள் முன்வருவது கடினம்.

தற்போதைய நிலையில், தமிழக அரசால் மதுபானத்துக்கான வரி, வணிக வரி உள்பட ஒருசில இனங்களில் மட்டுமே வரிகளை மாற்றியமைக்க முடியும். அரசின் தேவையை பார்க்கும்போது, இதுபோன்ற இனங்களின் வரியை உயர்த்தினாலும், பெரிய அளவில் கைகொடுக்காது.

**த.வெ.க. அரசின் தடுமாற்றம்**

எனவே, த.வெ.க. அரசின் 5 ஆண்டுகால ஆட்சியில் மட்டும் சுமார் ரூ.9 லட்சம் கோடி கடன் வாங்கும் நிலையே உள்ளது. நடப்பாண்டில் மட்டுமே ரூ.1 லட்சத்து 73 ஆயிரம் கோடி கடன் வாங்கும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில், நிதி மேலாண்மையை கையாள்வதில் த.வெ.க. அரசு தடுமாறுவதாகவே தெரிகிறது. அதாவது, பட்ஜெட் அறிவிப்புகளில் சில ஆரோக்கியமான மாற்றங்கள் தென்பட்டாலும், நிதி நிலைமையை பார்க்கும்போது, அதை சரிசெய்ய அரசு தடுமாறுவதையே பார்க்க முடிகிறது.

# வேலை வாய்ப்பு

## UPSC–யில் 828 முதல்வர் / து. முதல்வர் பணியிடங்கள்!




நிறுவனம்: யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (UPSC)
அறிவிப்பு எண்: 51/2026
பணி வகை: மத்திய அரசு நிரந்தர பணி
பதவிகள்: முதல்வர் (Principal),
துணை முதல்வர் (Vice Principal)
காலியிடங்கள்: 828
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 25.07.2026
கடைசி தேதி: 14.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.upsc.gov.in

# 11 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி மத்திய அமைச்சருக்கு முதல்வர் விஜய் கடிதம்!



சென்னை, ஆக. 07–

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 11 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் விஜய் கடிதம் எழுதியுள்ளார். இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள், அவர்களின் படகுகளை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்

# குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரெயில் மாற்றுப் பாதையில் செல்லும் என அறிவிப்பு!



சென்னை, ஆக. 07–

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மதுரை கோட்டத்தில் நடைபெற இருக்கும் பராமரிப்பு பணி காரணமாக, சில எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி கன்னியாகுமரியில் இருந்து நாளை (சனிக்கிழமை) அதிகாலை 5.50 மணிக்கு புறப்பட்டு ஹவுரா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.12666), மதுரை, மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக ஹவுரா செல்லும். கொடைக்கானல் சாலை, திண்டுக்கல் செல்லாது.

நாகர்கோவிலில் இருந்து வருகிற 9, 13, 20, 27 ஆகிய தேதிகளில் காலை 6.15 மணிக்கு புறப்பட்டு மராட்டிய மாநிலம் லோகமான்ய திலக் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16352), மதுரை, மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக செல்லும். திண்டுக்கல் செல்லாது.

குருவாயூரில் இருந்து வருகிற 12–ந்தேதி இரவு 11.15 மணிக்கு புறப்பட்டு எழும்பூர் வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16128), விருதுநகர், மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக எழும்பூர் வரும். மதுரை, சோழவந்தான், கொடைக்கானல் சாலை, திண்டுக்கல், மணப்பாறை செல்லாது. நாகர்கோவிலில் இருந்து வருகிற 22, 29 ஆகிய தேதிகளில் காலை 9.25 மணிக்கு புறப்பட்டு தெலுங்கானா மாநிலம் காச்சிகுடா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16354), விருநகர், மானாமதுரை, காரைக்குடி. திருச்சி ஆகிய மாற்றுப்பாதை வழியாக காச்சிகுடா செல்லும். மதுரை, திண்டுக்கல் செல்லாது.”

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## கருணாநிதி நினைவு நாள்! மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!!



சென்னை, ஆக. 07–

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் நினைவு நாளையொட்டி, சென்னையில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான மு. கருணாநிதியின் நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. அவரது நினைவு நாளையொட்டி, மாநிலம் முழுவதும் திமுக சார்பில் அஞ்சலி கூட்டங்களும், அமைதிப் பேரணிகளும் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதி சிலைக்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஓமந்தூரார் தோட்டத்தில் இருந்து மெரினா கடற்கரையில் உள்ள கருணாநிதி நினைவிடம் வரை, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியில் திமுக பொருளாளர் டி.ஆர். பாலு, துணைப் பொதுச் செயலர் கனிமொழி, முன்னாள் அமைச்சர்கள் கே.என். நேரு உள்ளிட்டோருடன் நூற்றுக்கணக்கான திமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னை மெரினாவில் உள்ள கருணாநிதி நினைவிடத்தில் திமுக நிர்வாகிகளும், தொண்டர்களும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

## முன்னாள் முதல்மைச்சர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு!



திருப்பூர், ஆக. 07–

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்டம் வாலிபாளையம் பகுதி 34 வது வட்ட கழகம் சார்பில் பாளையக்காடு பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இந்த நிகழ்வில் பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் பி ஆர் செந்தில்குமார்,34 வது வட்ட கழக செயலாளர் பி.ஆர் இளங்கோ, மற்றும் பகுதிக்கு உட்பட்ட நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்....

## ப்ளிப்கார்ட் ஃப்ரீடம் சேல்: நத்திங் ஸ்மார்ட்போன்களுக்கு அதிக தள்ளுபடி அறிவிப்பு!




ப்ளிப்கார்ட் ஃப்ரீடம் சேல் இந்தியாவில் ஆகஸ்ட் 8 ஆம் தேதி தொடங்குகிறது. இதில் ஸ்மார்ட்போன்கள், டேப்லெட் மற்றும் லேப்டாப்கள் உள்ளிட்ட பல்வேறு மின்னணு சாதனங்களுக்கு தள்ளுபடி வழங்கப்படுகின்றன. இருப்பினும், ப்ளிப்காரட் நிறுவனம் ஆகஸ்ட் 7–ஆம் தேதி முதல் இந்த சலுகைகளுக்கான முன்கூட்டிய அணுகலை வழங்கும்.

முன்கூட்டிய சலுகைகள் தொடங்குவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு, இங்கிலாந்தை சேர்ந்த நத்திங் ஸ்மார்ட்போன் நிறுவனம், நத்திங் போன் (4a), போன் (4a) ப்ரோ மற்றும் சமீபத்திய போன் (4b) ஆகியவை இந்த விற்பனை நிகழ்வின் போது தள்ளுபடி விலையில் கிடைக்கும் என்று அறிவித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் தங்கள் சேமிப்பை அதிகரிக்க வழிவகுக்கும். வாங்குபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டுகள் மூலம் வங்கி தள்ளுபடி மற்றும் எக்சேஞ்ச் போனஸ்களை பெற முடியும், இதன் மூலம் அவர்கள் ரூ. 6,000 வரை சேமிக்கலாம்.

கார்ல் பெய் தலைமையிலான நத்திங் நிறுவனம், ப்ளிப்கார்ட் ஃப்ரீடம் சேலின் போது நத்திங் ஃபோன் (4a), ஃபோன் (4a) ப்ரோ மற்றும் ஃபோன் (4b) ஆகியவை தள்ளுபடி விலையில் கிடைக்கும் என்று அறிவித்தது. மேலும், அந்நிறுவனம் தள்ளுபடி மற்றும் சலுகை விவரங்களை வெளியிட்டுள்ளது.

சமீபத்திய நத்திங் ஃபோன் (4b), கிரெடிட் கார்டு EMI பரிவர்த்தனைகளில் ரூ. 3,000 வரையிலான வங்கி தள்ளுபடியுடன் கிடைக்கும். மாற்றாக, வாங்குபவர்கள் வழக்கமான கிரெடிட் கார்டு பயன்படுத்தும் போது ரூ. 2,625 வரையிலான வங்கி தள்ளுபடி பெற முடியும்.

ப்ளிப்கார்ட் ஃப்ரீடம் சேல் மூலம் ரூ. 1,000 வரையிலான எக்சேஞ்ச் போனஸ் வழங்கப்படும், இது நத்திங் போன் (4b)–இன் விலையை ரூ. 30,999 ஆக குறைக்கிறது. நத்திங் போன் (4a) ரூ. 37,999 என்ற விலையில் கிடைக்கும், இதில் கிரெடிட் கார்டு EMI பரிவர்த்தனைகளுக்கு ரூ. 4,000 வரையிலான வங்கித் தள்ளுபடியும், ரூ. 1,000 வரையிலான எக்சேஞ்ச் போனஸ் அடங்கும்.

ஒரு வாடிக்கையாளர் கிரெடிட் கார்டு மூலம் முழுத் தொகையையும் ஒரே நேரத்தில் செலுத்தினால், அவர்களுக்கு ரூ. 3,225 வரையிலான வங்கி தள்ளுபடி வழங்கப்படும்.

கிரெடிட் கார்டு EMI பரிவர்த்தனைகள் மூலம் நத்திங் போன் (4a) ப்ரோ வாங்கும் போது ரூ. 4,500 வரை வங்கி தள்ளுபடி வழங்கப்படும்.

வாங்குபவர் முழு தொகையையும் ஒரே நேரத்தில் செலுத்த விரும்பினால், வரவிருக்கும் ப்ளிப்கார்ட் ஃப்ரீடம் சேலின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டுகள் மூலம் அவர்களுக்கு ரூ. 3,750 வரை வங்கி தள்ளுபடி வழங்கப்படும். மேலும், போன் (4a) ப்ரோவை வாங்கும் வாடிக்கையாளர்கள் ரூ. 1,500 வரையிலான எக்சேஞ்ச் போனஸ் பெறலாம்.

## தேசிய கைத்தறி தினம்: கைத்தறிப் பொருட்களை வாங்குங்கள் - பிரதமர் மோடி




புதுடெல்லி, ஆக. 07–

தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு, குறைந்தபட்சம் ஒரு கைத்தறிப் பொருளை யாவது வாங்கி நெசவாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு பிரதமர் மோடி மக்களை கேட்டுக்கொண்டார். கைத்தறிப் பொருட்களை பயன்படுத்தி, அதுகுறித்த வீடியோக்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்து மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்றார். சுதேசி இயக்கத்தின் நினைவு நாளான ஆகஸ்ட் 7–ம் தேதி, இந்திய நெசவாளர்களின் திறமையை உலகறியச் செய்வோம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## பேசினால் பிரச்னையில் தீர்வு கிடைக்காதா என்ற எண்ணத்தில் தான் பெங்களூரு செல்ல திட்டமிட்டேன்!



சென்னை, ஆக. 07–

காவிரி விவகாரத்தில் ஒருமுறை பேசி பார்க்கலாம் என்று தான் முயற்சி எடுத்தோம் என்று பேரவையில் முதல்வர் விஜய் பேசி இருக்கிறார். இதன் ஒருபகுதியாக தான் தனது பெங்களூரு பயணம் திட்டமிடப்பட்டதாக முதல்வர் கூறினார். எனவே காவிரிப் பிரச்னையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என கோரிக்கை வைத்தது நான் தான். ஒருவேளை இந்த பிரச்னையில் தீர்வு கிடைக்காதா? என்ற எண்ணத்தில் அந்த முயற்சி எடுக்கப்பட்டது. ஒருவேளை அதில் ஏதேனும் அவமானம் நடந்தால் தமிழ்நாட்டு மக்களுக்காக அதையும் தாங்க நான் தயாராக இருக்கிறேன். பகை நாடுகளே பேசி பிரச்சனைகளை தீர்த்து கொள்ளும் போது, பக்கத்து மாநிலம் தானே என்ற அடிப்படையில் தான் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது என்றார். தமிழ்நாட்டின் உரிமையை எப்போதும் இந்த அரசு விட்டுகொடுக்காது என்றும் குறிப்பிட்டார். எனவே காவிரி விவகாரத்தில் சட்ட ரீதியாக அணுகுவதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் கூறினார்.

## சட்டமன்றத்தில் மவுன அஞ்சலி...!



சென்னை, ஆக. 07–

சட்டமன்றக் கூட்டத்தில் மறைந்த தலைவர்கள் அல்லது முக்கியப் பிரமுகர்களுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. இயக்குநர் பாக்யராஜ், எழுத்தாளர் புவியரசு, பாடகி ஜானகி மற்றும் எழுத்தாளர் பூமணி மறைவுக்கு சட்டமன்றத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெளியே நடந்து சென்று ஆய்வுப்பணி மேற்கொண்ட நாசா விஞ்ஞானிகள்!



வாஷிங்டன், ஆக. 07–

நாசா விஞ்ஞானிகள் அனில் மேனன் மற்றும் ஜெசிக்கா மெய்ர் ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், இவர்கள் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் வெளிப்புற பகுதிக்கு சென்று, விண்வெளியில் நடந்து ஆய்வுப்பணி மேற்கொண்டுள்ளனர்.

இது சர்வதேச விண்வெளி நிலையம் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட 281–வது விண்வெளி நடைப்பயணமாகும். இதில் ஜெசிக்கா மெய்ர் 6–வது முறையாகவும், அனில் மேனன் முதல் முறையாகவும் விண்வெளியில் நடந்து சென்றுள்ளனர். இந்திய நேரப்படி நேற்று மாலை 6.30 மணிக்கு தொடங்கிய இந்த விண்வெளி நடை(Spacewalk), இரவு 12.30 மணிக்கு நிறைவடைந்தது. சுமார் 6 மணி நேரம் 27 நிமிடங்கள் நீடித்த விண்வெளி நடைப்பயணத்தின்போது, சர்வதேச விண்வெளி நிலையத்தின் வெளிப்புறத்தில் கட்டமைப்புகளில் மேம்பாட்டுப் பணிகளை அவர்கள் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, வரும் 13–ந்தேதி மற்றும் 25–ந்தேதி ஆகிய தினங்களில் மேலும் 2 முறை விண்வெளியில் நடந்து சென்று ஆய்வுப்பணிகளை மேற்கொள்ள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய தலைவராக பெலிக்ஸ் ஜெரால்டு நியமனம்!



சென்னை, ஆக. 07–

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக பெலிக்ஸ் ஜெரால்டு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் செய்தித் தொடர்பாளராக இருந்தவர் பெலிக்ஸ் ஜெரால்டு. இவர் தற்போது தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமனம் செய்து அரசு அறிவித்துள்ளது. மேலும் மூன்று ஆண்டுகள் அவர் இந்த பதவியை வகிப்பார் என்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

மூத்த பத்திரிகையாளரான பெலிக்ஸ் ஜெரால்டு, அரசியலில் முழுமையாக ஈடுபடுவதற்கு முன்பு, யூடியூப் சேனல் நடத்தி சமூக மற்றும் அரசியல் கருத்துகளை வீடியோவாக வெளியிட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆகஸ்ட் 20-ல் வங்கதேச அதிபர் தேர்தல்!

டாக்கா, ஆக. 07–

வங்கதேசத்தில் ஆகஸ்ட் 20–ஆம் தேதி அதிபர் தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கடந்த 2024–ம் ஆண்டு மாணவர் போராட்டத்தைத் தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் அரசு கவிழ்ந்தது. இதையடுத்து அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அரசியல் மாற்றத்திற்குப் பிறகும் அதிபராக இருந்த முகமது ஷஹாபுதீன், புதிய அரசுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்பு பதவி விலகினார்.

இதையடுத்து அறிவிக்கப்பட்ட தேர்தல் அட்டவணையின்படி, ஆகஸ்ட் 13 வேட்புமனு தாக்கல், ஆகஸ்ட் 16 மனு பரிசீலனை, ஆகஸ்ட் 18 மனு திரும்பப் பெற கடைசி நாள், ஆகஸ்ட் 20



## சினிமா துளிகள்..!

## பிரபலங்கள் அவுட்... இனி சாதாரண மக்களே பிக் பாஸ் ஹீரோக்கள்!




முதல் முறையாக 'Bigg Boss Common Man' மூலம் சாதாரண மக்களுக்கு பிக் பாஸ் வீட்டிற்குள் நுழையும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரபலங்களை மையமாகக் கொண்டிருந்த நிகழ்ச்சி, தற்போது பொதுமக்களின் வாழ்க்கைப் பயணத்தை மையமாகக் கொண்டு புதிய அத்தியாயத்தை தொடங்குகிறது.

விஜய் சேதுபதியின் அழைப்பைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கானோர் ஆடிஷன் வீடியோக்களை அனுப்பினர். பல கட்டத் தேர்வுகளுக்குப் பிறகு இறுதிக்கட்ட போட்டியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். ஆகஸ்ட் 16 முதல் தொடங்கும் இந்த சிறப்பு நிகழ்ச்சியில், முன்னாள் போட்டியாளர்களான ஆரி அர்ஜுனன், ராஜு ஜெயமோகன், ஓவியா ஆகியோர் நடுவர்களாகவும், மாயா கிருஷ்ணன் தொகுப்பாளராகவும் இணைந்துள்ளனர். ரசிகர்கள் மத்தியில் இந்த புதிய சீசனுக்கு பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

## ரூ.15 கோடி இழப்பீடு கேட்டு நீதிமன்றம் சென்ற ஸ்ருதி ஹாசன்!




நடிகை ஸ்ருதி ஹாசன், தனது பெயர், படம், குரல் மற்றும் அடையாளத்தை சட்டவிரோதமாக பயன்படுத்தியவர்களுக்கு எதிராக மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

AI மற்றும் டீப்ஃபேக் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தனது முகத்தை ஆபாசமான புகைப்படங்கள், வீடியோக்களில் இணைத்து இணையத்தில் பரப்புவதாகவும், தனது அனுமதியின்றி பெயர் மற்றும் புகைப்படத்தை பயன்படுத்தி போலி விளம்பரங்கள் மற்றும் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற செயல்களுக்கு தடை விதிக்கவும், சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து ரூ.15 கோடி இழப்பீடு வழங்க உத்தரவிடவும் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். AI மற்றும் டீப்ஃபேக் தவறான பயன்பாட்டுக்கு எதிராக நடிகர்கள் குரல் கொடுத்து வரும் நிலையில், ஸ்ருதி ஹாசனின் இந்த சட்டநடவடிக்கை கவனம் பெற்றுள்ளது.

## இந்திய சினிமாவில் புதிய வரலாறு... 'இராமாயணம்'




இந்திய சினிமா வரலாற்றில் இதுவரை இல்லாத புதிய சாதனையை 'ராமாயணா' திரைப்படத்தின் டிரெய்லர் படைத்துள்ளது. அனைத்து மொழிகளிலும், அனைத்து டிஜிட்டல் தளங்களிலும் வெளியாகியுள்ள டிரெய்லர் 100 கோடி (1 பில்லியன்) பார்வைகளை கடந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

நிதேஷ் திவாரி இயக்கத்தில் உருவாகும் இந்த பிரம்மாண்ட புராணத் திரைப்படத்தில் ரன்பீர் கபூர் ராமராகவும், சாய் பல்லவி சீதையாகவும், யஷ் ராவணனாகவும் நடித்துள்ளனர். உலகத் தரத்தில் உருவாகி வரும் இந்த திரைப்படத்தின் பிரம்மாண்ட காட்சிகள், விஎஃப்எக்ஸ் தொழில்நுட்பம் மற்றும் நட்சத்திர பட்டாளம் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. டிரெய்லர் வெளியான சில நாட்களிலேயே 100 கோடி பார்வைகளை கடந்து இந்திய திரைப்பட உலகில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இதன் மூலம் இந்திய சினிமாவில் அதிகம் பார்க்கப்பட்ட டிரெய்லர்களில் ஒன்றாக 'ராமாயணா' இடம்பிடித்துள்ளது

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020